# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2017 -2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. முரசு கட்டிலில் உறங்கிய புலவர்

அ) மோசிகீரனார் ☐ ஆ) திருவள்ளுவர் ☐

இ) ஔவையார் ☐ ஈ ) கபிலர் ☐

2. கிளி பழத்தைக் கொத்தித் தின்றது. இச்சொல்லியம்

அ) வினா ☐ ஆ) ஏவல் ☐

இ) கூற்று ☐ ஈ ) மெய்ப்பாடு ☐

3. குன்றனும் தேன்மொழியும் தமிழ்ப் பள்ளிக்குச் செல்வர். இங்கு வந்துள்ள செல்வர் என்பது

அ) இறந்தகாலம் ☐ ஆ) எதிர்காலம் ☐

இ) நிகழ்காலம் ☐ ஈ ) முக்காலம் ☐

4. கதிரவனை நோக்கியவாறு தவம் கிடக்கும் மலர் எனப் புலவர் கூறுவது

அ) மல்லிகையை ☐ ஆ) முல்லையை ☐

இ) செவ்வந்தியை ☐ ஈ ) சூரியகாந்தியை ☐

5. கயிலைவன்னியன் காலத்தில் வன்னி __________ பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

அ) ஏழு ☐ ஆ) ஆறு ☐

இ) ஐந்து ☐ ஈ ) மூன்று ☐

6. எழுது என்பது

அ) பெயரெச்சம் ☐ ஆ) வினையடி ☐

இ) வினையெச்சம் ☐ ஈ ) குறைவினை ☐

7. வேரிற் பழுக்கும் பழம்

அ) மாம்பழம் ☐ ஆ) பலாப்பழம் ☐

இ) வாழைப்பழம் ☐ ஈ ) திராட்சைப்பழம் ☐

8. பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து வலிமை பெற்றிருந்த அரசு

அ) கண்டியரசு ☐ ஆ) யாழ்ப்பாணஅரசு ☐

இ) கோட்டையரசு ☐ ஈ ) கரையோரச் சிங்களஅரசு ☐

9. சிற்றூர்ப் புறங்களில் நாட்டார் கூத்துகள்__________ நடைபெறும்.

அ) அணிஅணியாக ☐ ஆ) கற்றை கற்றையாக ☐

இ) விடியவிடிய ☐ ஈ ) பாளம்பாளமாக ☐

10. ‘பங்கப் பழனத் துழு முழவர்’ இப்பாடலில் பழனம் என்பது

அ) சேறு ☐ ஆ) வயல் ☐

இ) மரம் ☐ ஈ ) காடு ☐

11. அகழ்வாய்வின் போது பல நாடுகளுக்குரிய பண்டைய காசுகள் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) கந்தரோடை ☐ ஆ) நல்லூர் ☐

இ) பூநகரி ☐ ஈ ) கதிரமலை ☐

12. வட்டம் என்பது

அ) குணப்பெயர் ☐ ஆ) சினைப்பெயர் ☐

இ) காலப்பெயர் ☐ ஈ ) பொருட்பெயர் ☐

13. சிவப்பிரகாச அடிகளால் சினத்திற்கு உவமையாகக் கூறப்பட்டது

அ) வெள்ளம் ☐ ஆ) தீ ☐

இ) வானம் ☐ ஈ ) காற்று ☐

14. ஆங்கிலேயரை எதிர்த்துத் திறை செலுத்த மறுத்து வந்த பாஞ்சாலங்குறிச்சி மன்னன்

அ) எல்லாளன் ☐

ஆ) கயிலைவன்னியன் ☐

இ) வீரபாண்டிய கட்டப்பொம்மன் ☐

ஈ ) பண்டாரவன்னியன் ☐

15. உயிர்மெய்யெழுத்துகள்

அ) 247 ☐ ஆ) 216 ☐

இ) 217 ☐ ஈ ) 30 ☐

16. மருதுபாண்டியன் விளையாடச் சென்றது

அ) வீட்டின் அருகே ☐ ஆ) பள்ளியின் அருகே ☐

இ) வீதியின் அருகே ☐ ஈ ) இரும்புத்தடத்தின் அருகே ☐

17. பெச்கி அடிகளாரின் தமிழ்மொழி ஆற்றலை வெளிப்படுத்திய நூல்

அ) இலக்கண வினாவிடை ☐ ஆ) திருக்குறள் ☐

இ) சதுரஅகராதி ☐ ஈ ) தொல்காப்பியம் ☐

18. படர்க்கை இடப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நாங்கள் ☐ ஆ) அவன் ☐

இ) நான் ☐ ஈ) நாம் ☐

19. தமிழர் கலைகளை________ ஆகப் பகுத்துள்ளனர்.

அ) 34 ☐ ஆ) 44 ☐

இ) 64 ☐ ஈ) 24 ☐

20. மாணவன் என்ற சொல்

அ) அஃறிணை ☐ ஆ) பலர்பால் ☐

இ) உயர்திணை ☐ ஈ) பன்மை ☐

21. அல்லியும் சங்கவியும் என்பது

அ) சொற்றொடர் ☐ ஆ) சொல்லியம் ☐

இ) பெயரெச்சம் ☐ ஈ) வினையெச்சம் ☐

22. பின்வருவனவற்றுள் வேறுபட்ட இசைக்கருவிகளில் ஒன்று

அ) யாழ் ☐ ஆ) வயலின் ☐

இ) முரசு ☐ ஈ) வீணை ☐

23. கந்தரோடைக்கு நிகரான தலைநகராக விளங்கிய நகர்

அ) முத்தையன்கட்டு ☐ ஆ) கதிரமலை ☐

இ) பூநகரி ☐ ஈ) பனங்காமம் ☐

24. படித்த என்பது

அ) வினையெச்சம் ☐ ஆ) பெயரெச்சம் ☐

இ) வினைமுற்று ☐ ஈ) வினையடி ☐

25. இலக்கிய இன்பத்தில் பேரலை ஒன்றை எதிர்த்துப் பாய்வது

அ) சுறாமீன் ☐ ஆ) பாரைமீன் ☐

இ) வாளைமீன் ☐ ஈ) விண்மீன் ☐

26. இலங்கை உடைந்து தனித்தீவானதற்குக் கரணியம்

அ) கடற்கோள் ☐ ஆ) சூறாவளி ☐

இ) வெள்ளப்பெருக்கு ☐ ஈ) நிலநடுக்கம் ☐

27. பளபள என்பது

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

இ) இணைமொழி ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

28. இரக்கப் போனாலும் சிறக்கப் போ ! என்ற பழமொழியின் கருத்து

அ) தீயன செய்தோர் துன்புறுவர். ☐

ஆ) வறுமையிலும் செம்மையாக இரு. ☐

இ) ஒற்றுமை நலன் விளைவிக்கும். ☐

ஈ) மன நிறைவற்ற நிலை. ☐

29. ஆறுவது ____________ என ஔவையார் கூறினார்.

அ) சினம் ☐ ஆ) பணம் ☐

இ) கல்வி ☐ ஈ) அழகு ☐

30. பின்வருவனவற்றில் நீர்ப்பூ அல்லாதது

அ) அல்லி ☐ ஆ) ஆம்பல் ☐

இ) செவ்வரத்தை ☐ ஈ) தாமரை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் நால்வகை நிலங்களையும் உடையது ஈழம். ஆனால், ஈழத்தீவின் நெய்தல் நிலத்தில் மூன்றிலிரு பங்கு தமிழீழத்திற்குரியதாய் உள்ளது. மேல் திசையில் உள்ள புத்தளத்திலிருந்து தென்திசையில் உள்ள தேவன்துறை வரை சுற்றி வந்தால் எமது கடற்கரை தான். எங்களது நெய்தல் நிலத்தில் மீன்வளம் அளவிட முடியாது. மன்னார், பாலதீவு, பருத்தித்துறை, முல்லைத்தீவு ஆகிய பகுதிகள் சிறந்த மீன்வளமுடையன. தென்கிழக்கு ஆசியாவில் மிகவும் மீன்வளமுள்ள கடலையுடையது தமிழீழம். வடதமிழீழத்தைச் சுற்றியுள்ள பரவைக் கடல்கள் கடலட்டை, இறால் போன்ற பணமீன்வளத்தைக் கொண்டுள்ளன. இந்த மீனினம் பரவைக் கடலில் பல்கிப் பெருகுகின்றன. ஆனையிறவின் உப்பு வளமும் நெய்தல் நிலத்துக்குரியதே. ஈழத்தேவைக்கு மேலேயே உற்பத்தி செய்யக்கூடியது எங்களது உப்பளங்கள்.

1. எப்பகுதிகள் சிறந்த மீன்வளமுடையன?

______________________________________________

______________________________________________

2. ஆனையிறவின் உப்பு வளம் எந்நிலத்திற்குரியது?

______________________________________________

3. மீனினம் எக்கடலில் பல்கிப் பெருகுகின்றன?

______________________________________________

4. ஈழத்தின் நால்வகை நிலங்களையும் தருக.

______________________________________________

______________________________________________

5. தென்கிழக்காசியாவில் மிகவும் மீன்வளமுள்ள கடலையுடையது எது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இசைத்தூண்கள் அமைந்துள்ள கோவில்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. சினங்காத்தல் பற்றிக் கூறும் திருக்குறளின் அதிகாரம் எது?

3. வன்னியில் பெருமளவு பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

4. "தமிழுக்குத் தொண்டு செய்தால் - அந்தத்
   தமிழ் உள்ளளவும் வாழ்வோம்"
   இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

5. போர்த்துக்கேயரினதும் ஒல்லாந்தரினதும் ஆட்சியின்போது அவர்களுக்குத் திறை செலுத்துவதற்கு மறுத்த வன்னி மன்னன் யார்?

6. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
   ஒழுக்க மிலான்க ணுயர்வு
   இக்குறளின் பொருளை எழுதுக.

7. வீரம் செறிந்த வன்னி மக்களின் போர் வலிமையினால் வன்னி பெற்ற சிறப்புப் பெயர் யாது?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## புகழ்

| | | | | |
|---|---|---|---|---|
| காணும் | அறிஞனாய் | அஞ்சா | புகழ் | பண்பில் |

அன்பு காட்டும் அன்னையாய்
ஆர்வம் ஊட்டும் தந்தையாய்
இனிமை சேர்க்கும் தோழனாய்
ஈகைப் _____________ வள்ளலாய்

உறுதி கொண்ட மனத்தினனாய்
ஊக்கம் நிறைந்த மாந்தனாய்
எதற்கும்_____________நெஞ்சினனாய்
ஏற்றம் _____________ வீரனாய்

ஐயம் தீர்க்கும் _____________
ஒன்று பட்டு உயர்ந்திடுவாய்
ஓங்கு _____________ கண்டிடுவாய்
ஔவை வழி நடந்திடுவாய்

புள்ளிகள் 10

5) **இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அறுவகைப் பெயர்ச் சொற்களையும் எழுதுக.

________________________________________

________________________________________

2. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி என்பன இடம்பெறுமாறு ஒரு சொல்லியம் எழுதுக.

________________________________________

________________________________________

3. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

இறந்தகாலம் :- ________________________

முன்னிலை :- ________________________

அஃறிணை :- ________________________

4. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

ஆனி :- ________________________________

ஆணி :- ________________________________

5. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

கழனி :- ______________ கடுகி :- ______________

மாண்பு :- ______________ வேய் :- ______________

துயில் :- ______________ அல்லல் :- ______________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

சேந்தனும் குழலியும் வெய்யில் எறித்ததனால் வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது மழை பெய்தது. வானத்தில் வானவில் ஒன்றைக் கண்டனர். வானவில்லில் ஏழு நிறங்கள் இருந்தன. அவர்கள் அம்மாவிடம் ஓடிச்சென்று வானவில்லில் எப்படி ஏழு நிறங்கள் வந்தன? என்று கேட்டனர்.''கதிரவன் ஒளியில் இருக்கும் ஏழு நிறங்களே வானவில்லாகத் தோன்றின'' என அம்மா கூறினார். அதைப்பார்த்து இருவரும் மகிழ்ந்தனர். வெய்யிலும் மழையும் சேர்ந்து வரும்போது வானவில் தோன்றும் என அறிந்து கொண்டனர்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ தலையைக் காத்த தமிழ்

✸ தொலைக்காட்சி

- தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் பெயர், காலம்
- உலகச் செய்திகள், விளையாட்டுகள், பொழுதுபோக்குகள், கலைகள்
- தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படும் நன்மைகள்
- தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படும் தீமைகள்

✸ விளையாட்டுகள்

- தமிழர் தேசிய விளையாட்டுகள்
- வாழும் நாட்டு விளையாட்டுகள்
- விளையாட்டின் பயன்கள்
- நீர் விரும்பும் விளையாட்டு. ஏன்?

புள்ளிகள் 20